**OS.38/2023**

**நாள். 06.11.2025**

**வா.சா. 2 – கருப்பையா**

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

வாதியின் முகவர் கார்த்திகேயன் எனக்கு உறவினரா என்றால் ஆமாம். அவர் எனக்கு என்ன உறவு என்றால் சித்தப்பா உறவு. வாதி ஞானசௌந்தரியின் குடும்பம் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். வாதி ஞானசௌந்தரியின் சகோதரர் இறந்துபோன முனியசாமியின் மனைவி 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். முனியசாமிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் பிறந்த மகள் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி வனிதாவிற்கு திருமணமாகி அவரது கணவருடன் தனியாக வசித்து வருகிறார் என்றால் சரிதான். முனியசாமிக்கு பிரதிவாதிகள் தவிர வேறு வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். தாவா 1, 2 இலக்க சொத்துக்கள் முனியசாமி சுயமாக சம்பாதித்து அவர் பெயரில் கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். 3, 4 இலக்க சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். முனியசாமிக்கு பின்பு பூர்வீக சொத்துக்களான 3, 4 இலக்க சொத்துக்களை வாதி ஞானசௌந்தரியும் 1, 2 பிரதிவாதிகள் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். முனியசாமியின் மனைவி 1ம் பிரதிவாதி மகள் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான்.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.